# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8092317

1. District மாவட்டம் : Madurai PS: காவல்நிலையம் V &AC Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 21 Date: நாள் 4/10/19

2. (i) Act சட்டம்: Prevention Of Corruption Act Sections பிரிவுகள்: 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention Of Corruption (Amendment) Act 2018

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 03-10.19 Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 2000 hrs Time to : நேரம் வரை 23.30 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.10.2019 Time : நேரம் 12.15 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.10.2019 Time : நேரம் 12.45 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written Type

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 2 Km South West

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Assistant Engineer Quarters, PWD Staff Quarters Campus, Kamarajar Nagar Street, Chinnachokkikulam

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : Madurai

   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. G. Vadivel (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Gowrinathan

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation தொழில் Revenue Inspector (g) Address : முகவரி Sathamangalam Firka, Madurai North Taluk, Madurai District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. C. Senthilkumar, Assistent Engineer, Public Works Department, W.R.O, Periyar Vaigai Basin Division - I, Madurai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

(Attach separate sheet if necessary)

- Seperate sheets with typed matter in Tamil from Page Nos. 3 to 6 are enclosed herewith

... registered the case ... Refused

Tmt. T. Suriyakala, Inspector of Police, VRAC, Madurai

... copy given to the Complainant ...

A. Kannan
DSP/CI VRAC
4/10/19

... Officer in-charge Police Station

[signature] 4/10/19 RI Sathamangalam firka

04.10.2019
at 1415 hrs

A. KANNAN
Inspector Of Police,
VRAC, Madurai.

Submitted,

இன்று 04.10.2019-ம் தேதி, காவல் ஆய்வாளர் அ.கண்ணன் ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், சாத்தமங்கலம் உள்வட்டம் வருவாய் ஆய்வாளர் கௌ. வடிவேல், த/பெ. கௌரிநாதன் என்பவர் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களிடம் அளித்த புகார் மனுவை, பார்வையிட்டு, மதியம் 12.15 மணிக்கு உத்தரவிட்டதின் பேரில், மேற்படி புகார்மனு மற்றும் அத்துடன் ஒப்படைத்த திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 03.10.2019, பணம் ரூ.8,36,000/-, பணம் வைக்கப்பட்டிருந்த கருப்பு மற்றும் சாம்பல் நிற hp Laptop Bag, திரு. ச. செந்தில்குமார் அவர்களது வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். புகார்மனுவில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் கௌ.வடிவேல், த/பெ. கௌரிநாதன், வருவாய் ஆய்வாளர், சாத்தமங்கலம் உள்வட்டம், மதுரை வடக்கு வட்டம், மதுரை மாவட்டம். பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. அய்யா, பொருள் : திடீர் இணை ஆய்வு - மதுரை சின்ன சொக்கிகுளம் காமராஜர் நகர் 2 வது தெரு, பொதுப்பணித்துறை அலுவலர்கள் குடியிருப்பு வளாகம், உதவி பொறியாளர் குடியிருப்பில் 03.10.2019-ம் தேதி 20.00 மணி முதல் 23.30 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - பணம் ரூ.8,36,000/-, பணம் வைக்கப்பட்டிருந்த லேப்டாப் பேக் மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது - தொடர்பாக. 03.10.2019-ம் தேதி, மதுரை சின்ன சொக்கிகுளம் காமராஜர் நகர் 2-வது தெருவில் உள்ள பொதுப் பணித்துறை அலுவலர்கள் குடியிருப்பு வளாகத்தில் உள்ள உதவிப்பொறியாளர் குடியிருப்பில் தற்காலிகமாக தனது அலுவல் பணிகளை கவனிக்க பெரியாறு வைகை வடிநில உபகோட்ட உதவி பொறியாளர் திரு.செந்தில்குமார் என்பவர் பல்வேறு ஒப்பந்தப் பணிகளைச் செய்யும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள அரசு குடியிருப்பில் வைத்து லஞ்சம் பெறுவதாகக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில், மேற்படி இடத்திற்கு சென்று மாலை 05.00 மணி முதல் மதுரை ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு. கண்ணன் மற்றும் மற்ற அலுவலர்களுடன் இணைந்து தொடர்ந்து கண்காணித்த போது, மேற்படி வீட்டிற்கு வெளியே திரு.செந்தில்குமார், உதவி பொறியாளர் என்ற பெயர்ப் பலகை இருந்தது. மேலும், TN 65 V 3151 என்ற வெள்ளை நிற மாருதி ஸ்விப்ட் கார் நின்று கொண்டிருந்தது. வீட்டின் வாசல்களும், சன்னல்களும் மூடியிருந்தன. ஆனால், உள்ளே சென்று வந்தவர்களிடம், உரிய தகவலர் மூலம் விசாரித்த போது, திரு.செந்தில்குமார் என்ற உதவிப்பொறியாளர்

மேற்படி அரசு குடியிருப்பை தனது தற்காலிக அலுவலகமாக பயன்படுத்தி வருவதாகவும், தற்போது உள்ளே இருப்பதாகவும் தெரிவித்தனர். தொடர்ந்து அந்த வீட்டைக் கண்காணித்த போது, இரவு சுமார் 08.00 மணிக்கு மேற்படி அரசு குடியிருப்பின் உள்ளேயிருந்து கருப்பு பேண்ட், இளஞ்சிவப்பு நிற சட்டை அணிந்து, லேப் டாப் பேக்குடன் கதவைத் திறந்து வெளியில் வந்த நபரை வீட்டின் வளாகத்தின் உள்ளேயே நிறுத்தி அவரிடம் அறிமுகம் செய்து கொண்டு விசாரித்த போது, தான் உதவி பொறியாளர் செந்தில்குமார் என்று தெரிவித்தார். அவரிடம் சோதனையிடுவது குறித்து தகவல் தெரிவித்து, அவரை அவருடைய அரசு குடியிருப்பின் உள்ளே அழைத்து வந்து விசாரித்த போது, தான் குடும்பத்துடன் மதுரை கூடல் நகரில் குடியிருப்பதாகவும், மேற்படி பொதுப்பணித் துறை அலுவலர் குடியிருப்பை தனது அலுவலகமாகப் பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து 20.15 மணி முதல் பொதுப் பணித்துறை உதவிப்பொறியாளர் குடியிருப்பு சோதனையிடப்பட்டது. மேற்படி குடியிருப்பானது சின்ன சொக்கிகுளம் காமராசர் இரண்டாவது தெருவில் ஓ.சி.பி.எம். பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலிருந்து கோகலே ரோட்டின் சந்திப்பை நோக்கிச் செல்லும் கிழ மேல் மெயின் ரோட்டின் வடக்கே உள்ள பொதுப்பணித்துறை அலுவலர்கள் குடியிருப்பு வளாகத்தில் தெற்கு பார்த்து வாசலை கொண்டதும், பனை பொருள் வாரிய கேன்டீனுக்கு எதிரே அமைந்துள்ளது. மேற்படி தெற்கு திசை நோக்கியுள்ள குடியிருப்பில் உள்ளே நுழைந்தவுடன் தென் வடலாக ஒரு ஹாலும், அதன் கிழக்கே ஒரு ஓய்வறையும், அதனையடுத்து வடகிழக்கு மூலையில் சமையலறையும், ஹாலின் வடக்கு சுவற்றில் பின்பக்கம் செல்லும் வாசலும், பின் பகுதியில் திறந்த வெளியும், குளியலறை மற்றும் கழிப்பறையும் தனித்தனியே உள்ளது. மேற்படி ஹாலின் நடுவில் பெரிய அலுவலக மேஜையும் அதன் எதிரில் மேற்கு சுவற்றை ஒட்டி திரு.செந்தில்குமார் அமர்ந்து பணியாற்றும் அலுவலக இருக்கையும், மேற்கு சுவற்றுடன் இணைந்த மர கப்போர்டும் உள்ளன. அந்த கப்போர்டில் அலுவக கோப்புகளும், பல்வேறு அளவு புத்தகங்களும், அலுவலக சீல்களும் இருந்தன. மேஜையின் மீது பல்வேறு அளவு புத்தகங்களும், அலுவலகக் கோப்புகளும் இருந்தன. மேற்கே உள்ள அறையில் டெல் லேப் டாப் மற்றும் பிரிண்டர் வைக்கப்பட்டிருந்த கணிணி மேசை தெற்கு சுவற்றை ஒட்டி இருந்தது. அறையின் கிழக்கு சுவற்றில் மரக் கதவுகளுடன் கூடிய கப்போர்டிலும், தென்மேற்கே உள்ள கதவுகள் இல்லாத கப்போர்டிலும் பல்வேறு அலுவலகக் கோப்புகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவை குறித்து திரு.செந்தில்குமாரிடம் விசாரித்த போது, பென்னி குக் வளாகத்தில் உள்ள பொதுப் பணித் துறை அலுவலகத்தில், தனது அலுவலகம் உள்ளதாகவும், இட வசதியின் பொருட்டு தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பொதுப்பணித்துறை

அரசு ஊழியர் குடியிருப்பை தற்காலிக அலுவலகமாகப் பயன்படுத்துவதாகவும், திரு.ரஞ்சித்குமார் என்ற சூர்யா மற்றும் திரு.நரேஷ்குமார் என்ற தனிநபர்கள் தொழில் நுட்ப உதவியாளராக இருந்து அலுவல் கவனிப்பதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து, திரு.செந்தில்குமார் வைத்திருந்த கருப்பு மற்றும் சாம்பல் நிறம் கலந்த hp லேப் டாப் பேக்கை திறந்து சோதனையிட்ட போது, அந்தப் பையின் உள்ளே 4 இரண்டாயிரம் ரூபாய் கட்டுகளும், ஒரு 500 ரூபாய் கட்டும், ஒரு hp லேப் டாப்பும் இருந்தது. மேற்படி பையில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்த்த போது 3 இரண்டாயிரம் ரூபாய் கட்டுகளில் தலா 100 தாள்களும், மற்றொரு இரண்டாயிரம் ரூபாய் கட்டில் 97 தாள்களும் இருந்தன. மேலும், ஐநூறு ரூபாய் கட்டில் 84 தாள்கள் இருந்தன. ஆக மொத்தம் ரூ.8,36,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.செந்தில்குமாரிடம் விசாரித்த போது சற்று முன்னர் ஒப்பந்தகாரர்கள் கமிஷனாகக் கொடுத்த லஞ்சப் பணம் எனத் தெரிவித்தார். மேற்படி கமிசன் பணத்தைக் கொடுத்த ஒப்பந்தகாரார்கள் யார் என்று கேட்ட போது அந்த விவரங்களைக் கூற மறுத்து விட்டார். எனவே, மேற்படி லஞ்சப் பணம் ரூ.8,36,000/- கைப்பற்றப்பட்டது. சோதனையின் போது, திரு.செந்தில்குமார் வைத்திருந்த மணி பர்ஸில் ரூ.520/- மற்றும் ஆதார் அட்டை, டிரைவிங் லைசென்ஸ், ஏடிஎம் கார்டு, பான் கார்டு ஆகியவை இருந்தன. அது தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டன. மேலும், தகவலின் பேரில் சற்று நேரத்தில் சம்பவ இடத்துக்கு வந்த திரு.மொக்கை மாயன், உதவி செயற் பொறியாளர், பெரியாறு வைகை வடிநில உபகோட்டம் எண் - 1, பொதுப் பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு, மதுரை என்பவர், திரு.செந்தில்குமாரின் அலுவலக மேஜையில் இருந்த அளவு புத்தகங்கள் - 5, அவர் உதவி செயற்பொறியாளர்கள் திரு. செல்வம், திரு. மொக்கமாயன் மற்றும் திரு. சீனிவாசன் ஆகியோர் பெயரில் தயாரித்து வைத்திருந்த கையெழுத்திடப்படாத 31 கடிதங்களுடன் கூடிய கொட்டேஷன் அடங்கிய கோப்புகள் (ஒவ்வொன்றும் தலா 16 பக்கங்கள் உடையவை), PWD / WRD - Periyar Vaigai Basin Sub Division No.II, Madurai என்ற தலைப்பில் உள்ள Sl. No. 1 முதல் 47 வரை உள்ள Name of the Contractor, No. of works, Estimate amount போன்ற விபரங்கள் அடங்கிய பக்கம் 1 முதல் 22 வரையுள்ள ஆவணம், KUDIMARAMATH WOKRS 2019 – 2020 – List of Works proposed for year 2019 – 2020 in Sholavandan constituency விபரம் அடங்கிய பக்கம் 1 முதல் 8 வரையுள்ள ஆவணம் மற்றும் திரு. செந்தில்குமார் அவர்கள் காண்ட்ராக்டர்களிடம் கமிஷனாக பெற்ற பணம் ரூ.8,36,000/-த்தை வைத்திருந்த கருப்பு மற்றும் சாம்பல் நிற hp Laptop Bag ஆகியவற்றை மேல் விசாரணைக்காக ஒப்படைத்தார். அவை மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் ஆய்வின்

போது, மேற்படி பொதுப்பணித்துறை குடியிருப்பு / தற்காலிக அலுவலகத்தில் இருந்த பொருட்களுக்கோ, ஆவணங்களுக்கோ, உடைமைகளுக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை. திரு. செந்தில்குமார் வசமிருந்த hp Laptop அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், திரு. ச. செந்தில்குமார், என் முன்னிலையில் அளித்த வாக்குமூலம் தனியாக பதிவு செய்யப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு சம்மந்தமாக 03.10.2019-ம் தேதி 20.00 மணி முதல் இரவு 23.30 மணி வரை திடீர் இணை ஆய்வு செயல்முறை குறிப்புரை தயாரிக்கப்பட்டது. திடீர் இணை ஆய்வு செயல்முறை குறிப்புரை நகல் உதவிப்பொறியாளர் திரு. செந்தில்குமார் மற்றும் உதவி செயற்பொறியாளர் திரு. மொக்கைமாயன் ஆகியோர்களுக்கு வழங்கி அவர்களது ஒப்புதல் பெறப்பட்டது. மேற்படி செயல்முறை குறிப்புரை, கைப்பற்றப்பட்ட மொத்தப்பணம் ரூ.8,36,000/-, 38 ஆவணங்கள், பணம் வைக்கப்பட்டிருந்த கருப்பு மற்றும் சாம்பல் நிற hp Laptop Bag மற்றும் திரு. செந்தில்குமார் அளித்த வாக்குமூலம் ஆகியவற்றை இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு தங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். ஒப்பம் / - (கௌ. வடிவேல்) வருவாய் ஆய்வாளர், சாத்தமங்கலம் உள்வட்டம், மதுரை வடக்கு வட்டம், மதுரை மாவட்டம். இணைப்பு : மேற்கண்டவாறு. 12.15 / 04.10.2019. Inspector Tr. A. Kannan to register a case on the above complaint and the F.I.R along with the connected files, to be handed over to Tmt. T. Suriyakala, for conducting further investigation. ஒப்பம்/- (M. சத்தியசீலன்) 04.10.2019, DSP, V&AC, Madurai.

Sir, Received report along with Joint Surprise Check Proceedings, Dated : 03.10.2019, Cash Rs.8,36,000/-, hp Laptop bag, statement of Tr. Senthilkumar, seized documents and registered a case in Madurai V&AC Cr.No.21/2019 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 04.10.2019 at 12.45 hrs. ஒப்பம்/- (A. Kannan), Inspr / V&AC, 4/10/19.

The original FIR along with report of Tr. G. Vadivel, Joint Surprise Check Proceedings Dated : 03.10.2019 and statement of Tr. Senthilkumar are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Cases under PC Act, Madurai and other copies were sent to the officers concerned.

A. Kannan
Inspr V&AC
4/10/19
Inspector of Police
Vigilance and Anti-Corruption
Madurai